Tsunami Evaluation Coalition:

# Co-ordination of the International Tsunami Responses

## சுனாமிக்கான பன்னாட்டு பிரதிபலிப்பில் கூட்டுறவு

2004 டிசம்பர் சுனாமிக்குப் பிறகு மனிதாபிமானிகளின் ஒத்துழைப்பு கணக்கிடப்பட்டபோது இது நடைமுறையையும் சர்வதேச மனநிலையையும் செயல்முறையையும் பிரதிபலிப்பதாக இருந்தது. அப்போத அசாதாரணமாக பணத்தை திரட்டுவதற்க்கு சிரமங்கள் இல்லை.

சமீபகாலமாக வெளிவந்த உலக மனிதநேய பிரதிபலிப்பபு மறு பார்வை (HRR) மற்றும் நல்ல மனிதநேய நிதி உதவி திட்டம் (GHD) முக்கியமான ஆராய்ச்சி செய்யக் கூடிய அளவிற்கு பின்னணியை வகுத்திருக்கிறது.

இந்த மதிப்பீடு மூன்று நாடுகளையும் சேர்ந்ததாக இருந்தது. அதாவது இந்தோனேஷியா, இலங்கை, மாலத்தீவுகள் மேலும் கூடுதலான கணிப்புகள் தாய்லாந்திலிருந்து கிடைத்தது. நான்கு நபர்கள் கொண்ட ஒரு தேசிய ஆலோசகர் இலங்கையிலிருந்தும் மேலே கூறிய ஒவ்வொரு நாட்டிற்கும் பயணம் செய்தார்கள். அவர்கள் செப்டம்பர் மாதத்திலிருந்து நவம்பர் 2005க்குள் இந்த நாடுகளுக்கு பயணம் செய்தார்கள். 350க்கும் மேல் பலதரப்பட்ட மக்களை விசாரணை செய்தார்கள். இந்த விசாரணையில் உள்ளூர் மற்றும் தேசிய விசாரணை அதிகாரிகள் பாதிக்கப்பட்ட மக்களை பல கேள்விகள் கேட்டு அவர்களின் மனநிலைகளையும் கஷ்டங்களையும் அறிந்து கொண்டார்கள்.

இந்த மதிப்பீடு அவர்களுக்கு செய்யப்பட்ட உதவிகள், ஒத்துழைப்பு, ஏற்பாடுகள் மனிதநேய பண்பாக இவற்றை அறிந்து கொள்ளும் நோக்கமாக உள்ளது. இது எந்த வகையில் அந்த நாட்டின் அரசாங்கம் சாராத நிறுவனங்களையும் முகவர்களையும் பற்றியதாகும். அவைகள் ஒரு செயல்பாட்டின் ஒத்துழைப்பு செயல்முறை, வழிமுறை இவற்றை அடங்கிய 8 தன்மைகளைக் கொண்டதாகும்.

1. இந்த நிர்வாகத்திலுள்ளவர்கள் அவர்களுடைய நடத்தி செல்லும் திறன்,
2. மக்கள் சேவையை சரிபார்க்கக்கூடிய தன்மை, அதை சரிவர நடத்தி செல்லக் கூடிய தன்மை, அரசாங்க அதிகாரிகளோடு இணைந்து திட்டமிட்டு செயல்பட கூடிய தன்மை.
3. வேலையாட்களை தரம்பிரித்து கடின உழைப்புள்ளவர்கள், கடினமற்ற உழைப்புள்ளவர்கள் என்று பிரித்து வேலை வாங்கக் கூடிய தன்மை.
4. ஒழுங்கான திட்டமிடுதல்
5. திட்டத்திற்கு வேண்டிய தளவாடங்களை திரட்டுவது.
6. புள்ளி விவரங்களை சேகரிப்பதும் தகவல்களை பராமரிப்பதும்.
7. பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கும் உதவி அவர்களிடம் ஏற்படுத்தும் பாதிப்பைக் கணக்கிடுவது.
8. உடனடி முயற்சியாக செயல்படுவது.

உதவி அளிக்கக் கூடியவர்கள் உலக நாடுகளை சேர்ந்த ஸ்தாபனங்களைச் சேர்ந்தவராயினும அவர்களுடைய தன்மைகளை முடிவு செய்வது பாதிக்கப்பட்ட ஒவ்வொரு நாடாக இந்த சுனாமியின் பாதிப்பாக இந்தோனேஷியாவில் சமாதான முயற்சிகளுக்கு இடையூறாக சில சண்டைகள் தூண்டப்பட்டன. ஆனால் அது சமாதானத்திற்கு எவ்வகை பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

ஆனால் துரதிருஷ்டவசமாக இலங்கையில் அம்மாதிரி சந்தர்ப்பம் எழவேயில்லை. அங்கு முதலில் அளிக்கப்பட்ட உறுதிமொழி காப்பாற்றப்படவில்லை. சரியான விகிதத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யப்படும் என்று வாக்களிக்கப்பட்ட PTOMs முயற்சி தோல்வியடைந்து முரண்பாடுகள் தொடர்ந்தன.

குறைந்த எண்ணிக்கையுள்ள முகவர்கள் அவர்களுடைய மிக அருகிலுள்ள அலுவலகங்கள் மூலமாக மாலத்தீவுகளில் ஒத்துழைப்பு கிடைத்தது. ஆனால் இதற்கு மாறாக இந்தோனேஷியா, இலங்கை போன்ற நாடுகள் பிரிவுகளினால் சண்டைகள் தொடர்ந்து கொண்டே இருந்தன. இந்த பேரழிவுக்கு பிறகு முதல் மாதமே நூற்றுக்கணக்கான முகவர் நிறுவனங்கள் போட்டாபோட்டியுடன் வளர்ந்தன.

**தலைமைத் தன்மையும் அதன் செயல்பாடும்**

இந்த மாதிரி நெருக்கடியான நேரத்தில் ஐக்கிய நாட்டு சபையின் பிரத்யேக ஒத்துழைப்போடும் ஐக்கிய நாடுகளின் பிரத்யேக தூதரும் இந்த பாதிக்கப்பட்ட அரசாங்கங்களும் நூற்றுக்கணக்கான முகவர் நிறுவனங்களும் ஒரே நோக்கத்தோடு செயல்பட வேண்டும் என்று விரும்பினார்கள். இருந்த போதிலும் இந்த மதிப்பீடு மிக அதிகமான பொறுமையும் பொறுப்புமுள்ள தகவல் அளிக்கக் கூடிய சரியான முடிவுகள் எடுக்கக் கூடிய பலதரப்பட்ட மக்களை ஒற்றுமையுடன் இணைக்கவும் கால விரயத்தை தவிர்க்கவும் மிக நுணுக்கமான நிர்வாகம் தேவைப்படுமென்று அறியப்பட்டது. மேலும் இந்த நுணுக்கமான நிர்வாகம் அதிகமான தகவல்களை நியுயார்க்குக்கும் ஜெனிவாவுக்கும் அளித்து அதன்படி ஐக்கியநாடுகள் செயல்படுவது அவசியம்.

இப்போது நடக்கக் கூடிய மனிதநேய உணர்வுகளை கண்காணிக்கும் பேச்சுக்களின் பலனாக சுனாமி சம்பந்தப்பட்ட உணர்வுகளை சிறப்பிப்பது அவசியம். முன்கூட்டி அறிந்து ஒத்துழைப்பு தரக்கூடிய ஒரு நிர்வாக அமைப்பு தேவையாக கருதப்பட்டது. அதுவே உள்நாட்டு முகவர் வேலை அமைப்புக்கு இதன் தலைமையை தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்க முடிவு செய்யப்பட்டது. ஆனால் அனுபவமிக்க ஒத்துழைப்பாளர்களிடமிருந்து அரசாங்கம் சாராத ஸ்தாபனங்கள் எவ்விதமான பிரச்சனைகளையும் முக்கியமான உரையாடல்களைக் கொண்டு வருவதில்லை என்று குற்றம் சாட்டினார்கள். அரசாங்கம் சாராத சமூகம் மற்ற ஒத்துழைப்பாளர்களை உரையாடல்களில் பேசக் கூட அனுமதிக்கவில்லை என குற்றம் சாட்டின.

அவசர சட்டம் பிரகடனம் செய்த முதல் கட்டத்திலேயே பொதுமதிப்பீடும் பொது சேவையும் காணப்படுவதில்லை. எல்லா நாட்டிலேயும் பாதிப்பை மதிப்பீடு செய்யும் ஒவ்வொரு நிறுவனத்தின் பங்கையும் அறிந்து கொள்ளவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆனால் சுனாமிக்குப் பிறகு தகவல்கள் சேகரிக்கும் மையம் மற்றும் அங்கிருக்கக் கூடிய ஒத்துழைப்பு செய்யக் கூடிய இயக்கங்கள் மதிப்பீடுகளை விட அதிக முக்கியமானதாக கருதப்பட்டது. கணிப்புகள் முயற்சியின்மையும் தகவல் சேகரிக்காத தன்மையையும் தெரிவித்தது. இப்படியிருக்கும் போது எப்படி அங்குள்ள நிறுவனங்களின் திறனும் முகவை நிறுவனங்களின் தேவைகளும் தொடர்புபடுத்தப்படும். இதனால் செயல்பாட்டு கூட்டாளிகள் பொருட்கள் வாங்குவதிலும் அறைகளை வாடகைக்கு எடுப்பதிலும் அதற்கு வாடகை கொடுப்பதிலும் அவர்களுடைய ஏற்கனவே உள்ள சேவைகள் மூலமாக பயனடைகிறார்கள்.

இந்த மதிப்பீடு எல்லோருக்கும் அதிருப்தி ஏற்படுத்தியது. மேலும் கூட்டு முயற்சி சபையின் தன்மைகளும் திருப்தியாக இல்லை. இதில் பங்கு பெற்றவர்களின் பொறுப்புகளும் முடிவெடுக்கும் அதிகாரம் அவர்கள் செயலாற்றக் கூடிய தன்மையைப் பற்றி பேசப்படவில்லை. அதைவிட்டு உபயோகமில்லாத தகவல்களை சொல்லிக்கொண்டு முடிவுகளை எடுத்துக் கொண்டு இந்த சபை நடந்தது. அபூர்வமாக இந்த சபை கண்காணிப்பும் மதிப்பீடும் செய்யப்பட்டது. மேலும் இதில் பங்கு பெற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று தான் கணக்கிடப்பட்டது. ஆனால் இந்த சபையில் நடந்த பேச்சு வார்த்தைகள் பலமுறை பேசப்பட்டதும் சின்ன முகவை நிறுவனங்களுக்கு கிடைத்த லாபத்தை பற்றியதாக இருந்தது. வேறு உபயோகமான முடிவுகளை இந்த சபை எடுக்கவில்லை.

தொடர்ந்து வந்து கொண்டே இருந்த விருந்தாளிகள் வேறு உள்ளூர் அதிகாரிகளுக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் முகவை வேலையாட்களுக்கும் சுமையை கொடுத்தார்கள். இரண்டு வாரகாலமாக உயர் அதிகாரிகளின் வருகையினால் அவர்கள் தங்குவதற்கான ஏற்பாடு போன்றவை தான் நடந்தது. இந்த மதிப்பீடு ஒரு கட்டுக்கோப்பான தகவல்கள் சேகரிக்கக்கூடிய அவசர தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தது. எப்படியும் நல்ல தரமான வேலையாட்களை அவர்களிடமிருந்து வேலை வாங்கும் தன்மை அதுவும் மாவட்ட அளவில் தொழிலாளிகள் மற்றும் குறைந்த தளவாடங்களும் தேவையற்ற பதவிகளும் நிறைந்து இருந்தது ஒரு சவாலாகவே இருந்தது.

**அரசியல் அதிகாரிகளின் விருந்தோம்பல்**

நன்கு கட்டமைக்கப்பட்ட சட்ட திட்டங்கள் நன்கு வளர்ந்த தேசிய நிறுவனங்கள் சிரத்தையான நாட்டின் அரசாங்கங்கள் மூலமாகவே நிவாரண முயற்சிகள் வெற்றியடைந்தன. ஆனால் ஒரு ஸ்திரத்தன்மையுள்ள மத்திய அரசாங்கம் வளர்ச்சியடையாத உள்நாட்டு அரசாங்கத்தின் உதவி செய்யும் தன்மையை கொண்டு எதுவும் செய்ய முடியாமல் இருந்தது. எல்லா நாடுகளிலும் அரசாங்கத்தின் ஒத்துழைப்பு, அதனுடைய தகுதி, தன்மை, தகவல்களை அனுகக் கூடிய தன்மை பொறுத்தே நிவாரண உதவிகள் இருக்கும் என்று இந்த மதிப்பீட்டினால் தெரிந்தது.

இலங்கையிலுள்ள முன்பு நிறுவப்பட்ட ஒத்துழைப்பு அமைப்பு அவசரகால நடவடிக்கையால் மூடப்பட்டதனாலும் இராணுவத்தலையீட்டினால் இந்தோனேஷியாவிலுள்ள (ஏக் மற்றும் நியாஸ் மறுவாழ்வு புணரமைப்பு நிறுவனம்) இலங்கையை விட அதிகம் பலனுள்ளவையாக செயல்பட்டது. இந்தோனேஷியாவிலுள்ள நிறுவனம் மிகவும் பலனுள்ளவையாக செயல்பட்டது. ஐக்கிய நாடு மற்ற அமைப்புகளும் திறமைகளையும் திறன்களையும் அளித்து நிவாரண முயற்சிகள் செய்யப்பட மிகவும் உதவியாக அரசாங்கத்திற்கு இருந்தால் அங்கு முயற்சிகளுக்கும் சாதனைகளுக்கும் தொடர்பில்லாமல் இருந்தது. முக்கியமான பங்கு ஸ்திரத்தன்மையையும் அரசாங்கங்களிடையே எல்லாவகையான அதிகாரிகளுக்கிடையே குறைந்த கால கட்ட பதவியளித்து செயல்படுத்தி வந்தது. இலங்கையில் இந்த முக்கியமான பங்கு ஐக்கிய நாட்டு குழுவின் உதவியின்மையால் இல்லாமல் போனது. அதனால் இலங்கை பாதிப்படைந்தது. அதனால் உள்ளூர் தளவாடங்களும் வேலைக்கு நியமிக்கப்பட்ட அனுபவமற்ற தொழிலாளர்களும் நிவாரண முயற்சிக்கு இடையூறுகளாயிருந்தன.

**செயல் ரீதியாக பணி வகைப்படுத்துதல்**

இந்த மதிப்பீடு உயர்ந்த ஐக்கிய நாட்டு ஒத்துழைப்பாளர்களின் மாற்றங்களினால் பாதிப்படைந்தது. மேலும் வேலைக்கு நியமிக்கப்பட்டவர்களின் வேலை தன்மையும் அதிகமாக மாறுபட்டதனால் அவர்களுக்கு நிறை பயிற்சி தேவைப்பட்டது. அவர்களுடைய திறமையை வளர்த்துக்கொள்ள பயிற்சிகள் கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் இந்த செயல் ஐக்கிய நாட்டு தலைமைக்குள்ள ஒத்துழைப்பை தளர்த்தின. இவை ஐக்கிய நாடுகளின் நியமிக்கப்பட்ட வேலையாட்கள் தலைமை பொறுப்புகள் பற்றி பல கேள்விகள் எழுந்தன. இருந்தாலும் அரசாங்கத்தின் முயற்சியால் நிவாரண உதவிகளின் செயல்களால் தகுந்த திட்டமிடுதல் நோக்கம் மற்றும் ஒத்துழைப்பு போன்றவை இவற்றை சரி செய்ய தேவைப்பட்டது. சில அமைப்புகள் சில முக்கியமான அமைப்புகள் ஐக்கிய நாட்டு தலைமை பொறுப்பைப்பற்றி ஏமாற்றத்தை வெளிப்படுத்தின. சில அரசாங்கம் சாராத அமைப்புகள் இணையான உதவிகள் செய்தாலும் ஐக்கிய நாட்டு முகவர்கள் ஏன் ஒரு பகுதிக்கு மட்டும் ஒத்துழைப்பளிப்பதன் காரணம் தெரியவில்லை. சுனாமி பேரழிவுக்கு பிறகு Ingos என்ற அமைப்புகள் ஒரு நெருக்கடி நிலையை உருவாக்கினர். தேவைக்கு அதிகமான செலவுகளை செய்து சில Ingosகள் தங்கள் தனித்தன்மைகளை காட்டிக் கொள்ள, தங்களுடைய முக்கியத்துவத்தை ஏற்படுத்திக் கொள்ள பல கூட்டங்கள் நடத்தின. மேலும் பல வாக்குறுதிகள் கொடுத்தும் தங்கள் எல்லைக்கு அப்பால் மக்களுக்கு உறுதிமொழிகள் அளித்தும் பின் வந்த மாதங்களில் அறிவித்தன. திடீரென்று சிறியதிலிருந்து பெரிதாக வளர்ந்த செஞ்சிலுவை இயக்கம் ஒவ்வொரு நாட்டிலும் எதிர்பாராத ஒத்துழைப்பு பிரச்னைகளை உருவாக்கியது. இந்த அமைப்பு உதவியாக வழங்கப்பட்ட பொருட்களையும் சேவைகளையும் தன் விருப்பப்படி உபயோகப்படுத்தி உள்ளாட்சி சங்கங்களை கலந்து ஆலோசித்து செயல்பட்டது. ஆனால் எல்லா நாடுகளிலும் இதன் செயல்பாடு மற்ற நிவாரண உதவிகளை செய்து வரும் உறுப்பினர்கள் கொண்ட அமைப்புகளை பாதிக்கவில்லை. ஒத்துழைப்பு பிரச்னைகள் ஓரளவுக்கு குறைக்கப்பட்டு ஒத்துழைப்பு செயல்கள் ஜனவரி, பிப்ரவரியில் வளர்க்கப்பட்டு மார்ச் 2005ல் செயல்படுத்தப்பட்டது.

அதிகமான தகவல்கள் உதவியாளர்களுக்கும் மற்றும் உதவியாளர்களுக்கோ அல்லது தலைமையாளர்களுக்கோ மேற்குறிப்பிட்ட தன் செலவில் தளவாடங்கள் எப்படி உபயோகிப்பது என்பதைப்பற்றியும் தகுந்த பொதுவான திட்டமிடுதல் பற்றி நிறைய எடுத்து கூறியது. திரும்பத் திரும்ப அதே தகவல்களை கூறுவதாக இருந்தது. பல அமைப்புகள் தங்களுடைய உதவியாளர்களுடைய பகுதிகள் அதிகமான நிர்பந்தம் செய்யக் கூடிய தன்மையை பத்திரிக்கை மூலமாக வெளியிட்டதாக குற்றம் சாட்டினார்கள்.

உள்நாட்டு சார்ந்த அரசாங்க சார்பல்லாத அமைப்புகள் ஒத்துழைப்பு ஏக்கில் மாறுபட்டது. இது சாதாரணமான Ingo உள்ளமைப்புகள் கட்டத்தை விட மாறுபட்டது. Ingo கட்டமைப்புகள் கொண்ட கூட்டங்களில் 6 அல்லது 7 மிகப்பெரிய முகவை நிறுவனங்கள் பங்கேற்றார்கள். ஆனால் இதில் 65% மட்டுமே செயல்பாடுகளை நிறைவேற்ற முடிந்தது. மீதியுள்ள 35% கள் தகவல்களை பரிமாறிக் கொள்ளும் தன்மை பொது தன்மையை கடைபிடிக்கும் தன்மை, ஒத்துழையாமை இவற்றினால் பாதிக்கப்பட்டது.

கால விரயம் ஆகாமல் இருப்பதற்கு நேரடியாக செயல்படுத்தும் தன்மையை விரும்பி அவர்கள் கட்டிட பங்குதாரர்களாகவும் ஆகி உள்ளூர் அரசாங்கமல்லாத அமைப்புகளில் பயிற்சி பெற்று செயல்பட்டார்கள். இந்த மதிப்பீடு உலக நாடுகளின் நுழைவை மேலும் அதன் திறமையை உள்ளூர் அமைப்புகள் திறமைகளை ஒப்பிடும்போது ஏக்கிலும் இலங்கையிலும் நிறைவாகவே இருந்தது. இதனால் அங்கு அவசர உதவிகளை செய்யும் தன்மை இல்லாமல் போயிற்று.

இந்த மதிப்பீடு உள்ளூர் அமைப்புகளிலேயே அகில உலக முகவர்கள் மூலம் வேலைக்கு ஆள் அமர்த்த வேட்டையாடக் கூடிய முயற்சிகளும் அறியப்பட்டது. இது மேலும் நிவாரண வேலைகள் நடக்கும் சமயத்தில் தெளிவாக தெரிந்தது. மேலும் ஒத்துழைப்பு கட்டங்கள் அந்த முகவைகளால் அதிகாரம் செய்யப்பட்டது. ஆங்கிலம் முக்கியமான தகவல்கள் பரிமாறிக் கொள்ளும் மொழியாக ஆனது. இது சுதந்திரமாக செயல்படக் கூடிய அரசாங்கம் சாராத அமைப்புகளிடையேயும் அரசாங்க அதிகாரிகளுக்கிடையேயும் உள்ளூர் வேலையாட்களிடையேயும் பரவியிருந்தது.

பாதிக்கப்பட்ட மக்களின் கணக்கீடுகள் முக்கியமான எல்லைகல்லாக கருதப்பட்டது. கூட்டு முயற்சியோ தகவல் பராமரிப்போ நிவாரண வேலைகளோ அவ்வப்போது தகவல்களை சரி செய்யக்கூடிய வேலைகளோ முக்கியமானதாக் கருதப்படவில்லை. இதனால் மனக் குமுறலும் தகவலின்மையும் ஏற்பட்டது. மேலும் தகவல் பரிமாறிக் கொள்ளுதல், ஆலோசித்தல் போன்றவைகள் அகில உலக சமூகத்தினரிடையே இல்லாமல் போயிற்று. இதனால் பாதிக்கப்பட்ட மக்களிடையே ஒத்துழைப்பு வளர்ந்தது.

இந்த மதிப்பீடு மக்கள் இராணுவம் உறவை கண்காணித்தது. அவசர காலத்தில் இராணுவத்தின் நுட்பங்கள் பயனற்று போயின. ஆனால் அவர்களுடைய தேவைகள் நிவாரண வேலைகளுக்கு மிகவும் ஒத்துழைப்பு உரியதாக இருந்தது. ஆனால் ஒரு அமைப்பும் எல்லா நாட்டு மக்களுடைய தேவைகள் பாதிப்பு காலத்தின் உதவி செய்ய இராணுவத்திற்கு அறிக்கை கொடுக்க முடியவில்லை. IASC OSLO இந்த அமைப்பு இராணுவத்திற்க்கும் இராணுவத்தில் இல்லாதவர்களுக்கும் உதவியாக இருக்க பேரழிவு நிவாரண காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இது மிகப் பிரபலமாகவில்லை. இந்த நிவாரண உதவிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட மந்திரிசபையாலும் உபயோகப்படுத்தப்படவில்லை.

<u>நிவாரண வேலைகளுக்கான தகுந்த திட்டமிடுதல்</u>

ஒத்துழைப்பு முயற்சிகள் சுனாமி ஏற்பட்ட முதல் வருடத்தில் மிகவும்குறைவாக செய்யப்பட்டது. எந்த வழியில் செயல்படுத்துவது விளைவுகள் என்ன, குறிக்கோளை அடையும் வழிமுறைகள் என்ன என்பதை தெரிந்து கொள்ளவே நிவாரண முயற்சிகள் குறைவாக செய்யப்பட்டது.

முக்கயிமாக இந்தோனேஷியாவில் இந்த மதிப்பீடு முன்னெச்சரிக்கை இல்லாமை தகுந்த திட்டமிடுதல் இல்லாமை, பாதுகாப்பு கொடுக்காமை இவைகளை கண்டறிந்தது. மேலும் தரமான வீடுகளை கட்டி கொடுக்க மட்டுமே கவனம் செலுத்துவது அவசர தேவைக்கு தற்காலிகமாக வசிக்கக்கூடிய வீடுகள் கட்டிக் கொடுப்பது நிராகரிக்கப்பட்டது. ஆனால் அது மிகவும் நெருக்கடியான நேரத்தில் தேவைப்பட்டது.

எப்படி பணத்தை உபயோகிப்பது எந்த வழியில் உபயோகப்படுத்துவது போன்றவைகள் சிரமமாக இருந்தன. தொழிலாளர்கள் புவியியல் பொறுப்புகளை ஏற்கக் கூடிய முகவை நிறுவனங்கள் தேர்ந்தெடுப்பது முதலியவற்றை முக்கியமாக கருதப்பட்டன. இவைகள் ஜகர்த்தாவிலுள்ள RC/HC பிரகடனப்படுத்தப்பட்டன. ஆனால் நிறைவேற்றப்படவில்லை. சுனாமி சிரத்தன்மையையும் ஆண்வர்க்கத்தின் அதிகாரத்தை பாதுகாப்பின்மையை வளர்த்து அவற்றை எதிர்கொள்ள முடியாமல் செய்தது. அதில் முக்கியமாக ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தை மட்டுமே கொடுக்கக் கூடிய செய்தியாகவும் அதே சமயம் இன்னொரு வர்க்கத்தை தேவையான உதவிகளை பெறக்கூடிய தன்மையை மறைத்து விட்டது.

அரசாங்கம் மற்ற அகில உலக அமைப்புகளை ஒத்துழைப்பு தரும்படியும் மிகுந்த கவனம் செலுத்தும்படியும் செய்தது. ஆனால் அரசாங்கம் சாராத அமைப்புகள் விலகின. பிறகு ஒத்துழைப்பு 2005 பிற்பகுதியில் முன்னேற்றம் அடைந்தது. உலக அமைப்புகளின்

தொழிலாளர்கள் ஸ்திரப்படுத்தப்பட்டு அதிக காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டனர். புதிய யுக்திகள் கண்டுபிடிக்கப்பட்டு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது. ஆனாலும் இவற்றுள் இடைவெளிகள் ஆரம்பமாயின என்பது முழுமையாக தெரிந்தது.

அரசாங்கத்தின் பொருளாதார விவரங்கள், கணிப்பீடுகள் பொறுப்புகள் இவை இந்தோனேஷியா, மாலத்தீவுகள் தற்செயலாக ஒத்துப்போயின. சர்வதேச பொருளாதார நிறுவனங்கள் ஏற்கனவே ஏற்பட்ட அழிவுகளின் நஷ்டங்களை ஏற்றுக்கொண்டன. அதன் பின்னால் ஒரு தர்ம ஸ்தாபனம் ஏற்படுத்தி பொருள் உதவி செய்வோர் ஒற்றுமையோடு இந்த மாதிரி நிவாரணம் தேவைப்படும்போது அந்த போது தர்ம ஸ்தாபனத்தில் இருந்து உதவி செய்வது என்ற அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

**ஒன்றுபட்ட திட்டத்திற்கு பொருள் திரட்டுதல்**

எடுத்துக் காட்டப்பட்ட 6 மாத செலவு கணக்குகளின் காலம் முதலில் சொல்லப்பட்டது. தவறாக காட்டப்பட்டது. முதலில் உள்ள அத்யாவசியமான செலவினங்கள் ஈடு செய்வதற்க்குரிய காலம் மிகவும் நீண்டதாகும். பல முகவர் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை ஈடு செய்வதற்கு நீண்ட கால திட்டமாக இருந்தது. ஆனால் இது பொதுமேடையில் விவாதிக்க கூடி கொள்கையை விவாதிப்பதில் எந்த மாற்றமும் ஏற்படுத்தவில்லை. முதலில் 5 வருட நிவாரண திட்டம் முதல் மாதத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இது ஐக்கிய நாட்டு கொள்கை அடிப்படையாக இருந்தது. இது அந்த முகவர் நிறுவனங்களை உள்ளடக்கிக் கொண்டதாகவும் முதலில் இருந்தது. அதன் பிறகு இது ஸ்திரமான செயல்பாடாக எடுத்துக்கொள்ளப்படவில்லை.

பொருளாதார பொது ஸ்தாபனங்களை முன்னேற்றுவதற்க்காக சர்வதேச பொருளாதார நிறுவனங்கள் பொருளாதார உதவி நல்குபவர்களின் அமைப்பை ஒரு கூட்டமைப்பு மூலம் உயர்த்தியது. இப்படி செய்யும்போது தேசிய பொருளாதார திட்டத்தில் இது போன்ற திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. புணரமைப்புகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. மிக முக்கியமாக நிதி ஸ்தாபனங்களின் பொருள் கொள்கை திட்டத்தை ஊக்கப்படுத்துவதாக இருந்தது. இது பற்றிய பேச்சு வார்த்தையை நிதி உதவியாளர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஒரு கட்டமைப்பை ஏற்படுத்தியது. நிதி உதவியாளர்களின் நிதி கூட்டமைப்பு இந்தோனேஷியாவில் மிகவும் நன்றாக செயல்பட்டது. உதாரணத்திற்கு உலக வங்கி அந்த நாட்டின் அரசாங்கத்துடன் நல்லுரவு கொண்டு பேச்சு வார்த்தையில் ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தி இந்த நிதி உதவிகளை செயல்படுத்தி

முக்கிய தூணாக அரசாங்கத்தை தாங்குகின்ற உத்திரமாக அமைந்தது என்றாலும் மெதுவாக வழங்கப்பட்ட நிதியினால் இதன் செயல்பாட்டினை தளர்த்தியது.

இது நிதி உதவியாளர்கள் தங்கள் நிதியை நிர்பந்தமாக தாங்களே உபயோகப்படுத்தும் நிலைமை உருவாகியது. பல செயல் நிறுவனங்களும் இந்த நிதி உதவியாளர்களுக்கு தங்களுடைய நேரத்தை செலவு செய்து தனித்தனியாக அறிக்கை அளிக்கும்படி நிர்பந்தமான சூழ்நிலை உருவாகியது. காரணம், நிதி உதவியாளர்கள் தாங்களே தங்களின் நிதியை வழங்குவதே விதிமுறைகளை கடைபிடிப்பதில் உள்ள தற்போதைய கஷ்டங்கள் ஒரு பக்கம் இருந்தாலும் ஒதுக்கப்படாத நிதி உதவிகளை முழுவதுமான திரட்டப்பட்ட அறிக்கைகளும் அறிக்கைகளும் அதுக்கீடுகளும் முகவர் நிறுவனங்களின் தகுதி அடிப்படையிலும் தேவை விண்ணப்பங்களின் அடிப்படையிலும் அளிக்கப்பட்டது. இருந்தாலும் அதிகமான முயற்சிகள் தேவைப்படுகிறது (அதுவும் ஐக்கிய நாட்டு அறிக்கைகளின் அடிப்படையில்) இவைகள் சாதாரண திட்ட செயல்பாடு மற்றும், நிதி உதவியாளர்களை திருப்திப்படுத்தும்படியான தகுந்த விளக்கம் அளிக்கப் பட வேண்டும். ஏனென்றால் நிதி உதவியாளர்கள் தங்கள் நிதிகளின் நிலைமையைக் கண்காணிக்க விரும்புகிறார்கள்.

**தகவல் மேலான்மை**

அவசர கால நிலைமையில் தகவல் தொடர்பு கொண்டு துரிதமாக செயல்பட செல்போன்களும் மின்அஞ்சல்களும மிக முக்கியமான கருவிகளாக கருதப்பட்டன. காரணம் அதிகபட்சமான தொழில் நுணுக்கங்கள் தனியார் வசம் இருந்தது. இதன் விளைவாக தகவல்களின் தரத்தை உயர்த்தவும் பங்காளிகளின் முன்னேற்றத்திற்க்காகவும் அதிகமான முயற்சிகள் தேவைப்பட்டது. இம்முயற்சிகள் அவர்களின் தனித்திறமை ஊக்குவிக்கவும் தேவைப்பட்டது. இருந்தபோதிலும் எந்த விஷயத்திற்கு ஒதுக்கப்பட்டதோ அந்த நிதியை நிவாரணம்/புணர்வாழ்வு போன்றவைகளுக்கு அதற்கு வாதாடும் வேலைக்கு உபயோகிக்கப்பட்டது.

ஒருங்கிணைக்கப்பட்ட பொதுப்படையான திட்ட செயல்முறை மனித உரிமைக்காக ஏற்பட்டாலும் இந்த திட்ட செயல்முறை மனித உரிமையை காப்பதற்கு முடியாமல் போய்விட்டது. இந்தத் திட்டம் சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கான பொது நடைபாதையாகவே இருந்தது. மேலும் செல்வாக்கற்ற பிரிவினருக்கு அதுவும் பெண்களுக்கு பாதுகாப்பாக இருந்தது.

இந்த செயல் முறையைப்பற்றி பல தரப்பட்ட பிரதிவாதிகள் சுட்டிக்காட்டினார்கள். மேலும் சுட்டிக்காட்டும் போது பொறுப்புக்களின் பகுதிகள் ஐக்கிய நாட்டினருக்கும் மனித நேய ஒருங்கிணைப்பார்களுக்கும் பிரித்துக் கொடுப்பதின் அளவு தெளிவாக இல்லை. எப்போதும் சரியாக இருந்ததில்லை.

**ஓன்று படுத்தப்பட்ட பரிந்துரைகளும் செயல்களும்**

1. ஒரு சர்வதேச மறுபரிசீலனையும் அதைத் தொடர்ந்து ஆலோசனையையும் சர்வதேச அரசமைப்புகளும் உள்நாட்டு அரசு அல்லாத நிறுவனங்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுக்கொள்வது குறிக்கோள்களை அடைவதற்க்குரிய புது வழிமுறைகளை முன்னேற்றுவதற்க்கும் உதவியாக இருக்கும் a. எல்லா அடுக்குகளிலும் உள்ள ஒருங்கிணைந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள வேண்டும். b. முக்கிய விஷயங்களின் பொதுநிலைக்கு செயல்பாட்டினை மாற்றியமைத்து முன்கூட்டி அறியும் தன்மை இருக்க வேண்டும். c. அரசு சாராத பொறுப்புள்ள நிறுவனங்களை தேர்ந்தெடுப்பதற்குரிய ஒரு தகுதி சான்றிதழ் நடைமுறையை அறிமுகப்படுத்த வேண்டும். அதாவது அரசு சாராத பங்காளிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்து வேலை செய்ய வைக்க வேண்டும். (செயல்: DASC NGO கூட்டமைப்பு நிதி உதவியாளர்கள்).

2. சிக்கலான தேவைகளுக்கும் இயற்கை சீற்றங்களில் ஏற்படும் பேரழிவை சமாளிக்கவும் RC/NC ம் கூட்டாக ஒரு பொது அரசு சாராத நிறுவனம் / ரெட்கிராஸ் போன்றவைகள் தலைமை பொறுப்பேற்று சிக்கலான விஷயங்களுக்கு தீர்வு காண செயல்படவேண்டும். நிலத்தை கையகப்படுத்தும் காலம், சொந்தமாக்கிக்கொள்ளுதல், பாதிக்கப்பட்ட பாதிக்கப்படாத மக்கள் போன்றவைகள் இதில் அடக்கம். மேலும் யுத்த பாதிப்பினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொண்டும் முன்னேற்ற செயல்களும் இதில் உள்ளன.

3. தேசிய அரசாங்கமும் மானிய அரசாங்கமும் தங்களுடைய ஒற்றுமையுணர்வையும் திறமையையும் உயர்த்திக் கொள்ள முக்கியத்துவம் கொடுக்க சர்வதேச சமுதாயம் உறுதி கொடுக்க வேண்டும் இது ஒரு உதாரணத்திற்கு உயர் அதிகாரிகளை நியமிக்கவும் அவர்களின் உள்ளூர் அதிகாரிகள் தகவல்கள் சேகரிக்க உதவியாகவும் தங்கள் திறனை வளர்த்துக்கொள்ளவும் செய்து கொள்வது உள்ளடக்கப்பட்டதாகும். எங்கு சர்வதேச அமைப்புகளின் நுழைவுகள்

எதிர்பார்க்கப்படுகிறதோ அங்கு ஒரு அரசு சாராத அமைப்பு உயர் அதிகாரி நியமிக்கப்படுவதும் அவசியம்.

4. நன்கு செயல்படும் தகவல் திறனும் உதவிகளைப் பெற்று பயன்பெறும் மக்களும் எல்லா நிலையிலும் ஒருங்கிணைந்த முயற்சியினாலும் எல்லாத் தரப்பினருடைய அதுவும் பெண்கள் உள்ளிட்டவர்களின் பேச்சு வார்த்தையையும் முக்கியமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இவைகள் முழு கவனமுள்ள தொழிலாளர்கள் முயற்சிகள் அதற்குரிய கருவிகளை கொண்டதாக அமையும். இவைகளை அரசாங்கம் செய்ய வேண்டும் பொதுவான கொள்கை வகுக்கப்பட்டு பொதுக்கூட்டங்கள் முலமும், அமைப்புகள், தொலைக்காட்சி, பத்திரிகை, சுற்றரிக்கை மூலமும், சுவரொட்டிகள் மூலமும் செய்ய வேண்டும்.

5. ஒரு பொது பயனதரத்தக்க தகவல் நிலை உருவாக்கப்பட்டு அந்த தகவல் நிலை மத்திய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு அவசர நிலையின் போது முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். (செயல்பாடு எல்லா நிறுவனங்களும், அரசாங்கத்தோடு ஒருங்கிணைந்து செயல்படல்).

6. நிதி உதவியாளர்களின் மற்றும் அதிகாரிகள் தொழிலாளர்கள் போன்றவர்களின் போக்குவரத்து கண்காணிக்கப்பட்டு அறிக்கை பெறப்பட வேண்டும். பிரதிநிதிகளின் போக்குவரத்து செலவுகளையும் அறிக்கையாக அளிக்கப்பட வேண்டும். இச்செயல்பாடுகள் பொதுவாக வரையறுக்கப்பட்டு GHDயின் ஆலோசனையின் அடிப்படையில் செய்ய வேண்டும்.
(செயல் - எல்லா நிறுவனங்களும் சர்வதேர அரசு சாராத நிறுவனங்களும்)

7. கூட்டங்களின் முடிவுகளில் எவ்வளவு செயலாற்றுதலை அதிகரிக்க முடியும் எப்படி தலைமையின் திறமையையும் மற்றுமு் தரத்தையும் உயர்த்த முடியும் என்று அறியும் முயற்சியுமே விவாதிக்கப்பட்டது. இந்தத் திறமைகள் எல்லா முகவர் நிறுவனங்களிலும் வளர்க்கப்பட வேண்டும் என்றும் தொழிலாளிகளின் பயிற்சி மற்றும் செயல்பாட்டுத்திறமை இவற்றை திறம்படச் செய்ய வேண்டும் என்ற முடிவுகள் எடுக்கப்பட்டன. அத்தோடு ஒரு ஒருமித்த சட்டதிட்டங்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளும்படி அமைக்கப்பட வேண்டும். (செயல் - எல்லா முகவர் நிறுவனங்கள் மற்றும் OCHA)

8. ஒரு தகுதிக் குறிப்பீடு (ஆண்பால் பெண்பால்) அமைத்து ஒத்துழைப்பு அளிக்கச்செய்ய வைக்க வேண்டும். அடை வளர்த்தி சாதாரணமாக அதை கண்காணிப்பு செய்ய வேண்டும். அதைப்பற்றி தகவல் பெறப்பட உள்ள முறை அமைத்து ஒத்துழைப்பின் தரம் பற்றி கூட்டங்கள் நடத்தப்பட்டு விவாதிக்க வேண்டும் (செயல் OCHA மற்றும் எல்லா முகவர் நிறுவனங்களும்).

9. பெரிய அளவில் அவசரகால நிலைகள் ஏற்படும் போது பாலின பிரச்சனைகளை மனிதநேயத்தின்படி சமாளிப்பதற்கு முழு நேர தனி அலுவலரரை RC/SC அலுவசகத்தில் அதற்கென பணியில் அமர்த்த வேண்டும்

10. மே 2006 அறிவுறுத்தல்களின்படி OCHA ணியில நன்கொடைகளை சமாளிப்பதற்கு ஆவண செய்ய வேண்டும். முதற்கட்டமாக உள்விவகார பாலிசிகள் பற்றியவை OCHA ஊழியர்களுக்கிடையே தெரிந்திருத்தல் அவசியம் ஆகும். அடுத்ததாக சாதகமான மிகப்பெரிய நன்கொடையாளர்களுக்கிடையே சுமூகமான செயலாக்கத்திட்டம் வடிவமைக்கப்படவேண்டும் . முக்கியமான தனியார் நிறுவனங்களோடு வரியான பேச்சு வார்த்தைகள் செய்வதற்கானவையை OCHA ஊர்ஜிதப்படுத்துகிறது.

11. பணியாளர்களின் பணியில் நீண்ட காலம் தங்காமல் இருப்பதை தவிர்க்க வேண்டும் நீண்ட கால ரீதியில் (குறைந்தபட்சம் ஒரு வருடம்) ஒருவர் பணியில் இருப்பதற்கான ஆவண செய்ய வேண்டும். பணியாளர்களின் சேர்க்கையின் போது தீவிர வேகம் மற்றும் தற்காலகத் தேவைகளை நிறைவு செய்ய போதுமான நபர்களின் பட்டியலை ஆயத்தமாக்கி வைத்திருப்பது ஆகியவைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்

12. சரியான நெறிமுறைகள் வழிமுறைகள் மூலமாக மக்கள் இராணுவ கூட்டுறவை பலப்படுத்த வேண்டும் அதற்கான தகுந்த பயிற்சிகள் தேவையான நேரங்களில் மக்கள் இராணுவ உறவுகளைசுமூகமாக தக்கவைப்பதில் உதவும். மேல் நிலை நடவடிக்கையாளர்கள் குறிப்பாக RC/HC த அலுவலகம் மக்கள் மற்றும இராணுவ மனித வளங்கள் விஷயங்களில் சிறந்த அறிவு பெற்றிருத்தல் வேண்டும். அதன் மூலமாக மக்கள் இராணுவ கூட்டுறவு செயல்பாடுகளை சிறப்பாக செயல்படுத்தக்கூடிய சிறப்பு நிபுனர்களை தேவைக்கேற்ப பணியில் அமர்த்த ஏதுவாகும்.

13. பொதுவான தகவல்கள் அனைத்து தொண்டு நிறுவணங்களுக்கும் கிடைக்க வகை செய்தல் மற்றும் அதற்காக ஐ. நா சாராத ஏஜென்ஸிகளின் பலத்தை மனித நேய தேவைகளுக்காக வேண்டி பயன்படுத்த ஏதுவாக தகவல் அனைத்தையும் நேர்த்தியாக செய்ய வேண்டும்

14. நிவாரணம் மற்றும் சீர்திருத்த பணிகளுக்கான ஒத்துழைப்பிற்கு தேவையான மூலங்களை ஊர்ஜிதப்படுத்த வேண்டும். அரசு சாரா நிறுவனங்களும் ரெட் கிராஸ் இயக்கத்தினோடும் உறுதுணையாக இருப்பபது இதில் அடங்கும். எந்த விதமான பாரபட்சமின்றி நிவாரண சீர்திருத்த மற்றும் வளர்ச்சி பணிகளில் RC/HC அலுவலகங்களுக்கு சிறப்பான உறுதுணையாக இருப்பதற்கான முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும் (செயல்: அனைத்து ஏஜென்ஸிகள் மற்றும் ERC, IASC )